**S.C. No.56/2020**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.1 திரு. சாமி, த/பெ. கண்ணன்**

**தேதி-14.07.2025**

**அ.சா.1 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்த போது என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள எங்கள் நிலத்தின் வழியாக லைன் போட்டு கொடுத்தால் சண்டைக்கு வர மாட்டேன் என எதிரி சொன்னதால் லைன் போட நாங்கள் இடம் கொடுத்தோம் என்ற விவரத்தையும், எதிரி எங்கள் நிலத்தில் லைன் போட்டுக் கொண்டார் என்ற விவரத்தையும் என்னுடைய புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் புகாரில் சொல்லவில்லை, போலீசார் விசாரணையிலும் நீதிமன்றத்திலும் சொல்லியுள்ளேன்.

எத்தனை அடி நீளம் மற்றும் அகலத்திற்கு லைன் போடப்பட்டது என்றால் எங்கள் நிலத்தில் உள்ள மின் கம்பத்திலிருந்து எதிரியுடைய மின் கம்பத்திற்குச் செல்வது தான், தரையில் செல்வது அல்ல. மின் கம்பத்தில் லைன் கொடுத்ததாக சொல்வது சுரங்கப் பாதையிலிருந்து எவ்வளவு தொலைவு என்றால் மின் கம்பம் எங்கள் நிலத்தில் உள்ளது, மின் கம்பத்திலிருந்து 10 அடி தூரத்தில் சுரங்கப் பாதை உள்ளது. மின் கம்பமும் சுரங்கப் பாதையும் எதிர் எதிர் திசையில் உள்ளது.

15.06.2019 அன்று இரவு சுமார் 7.30 மணியளவு முதல் 8.30 மணியளவில் எங்கள் நிலத்தில் ரயில்வே சுரங்கப் பாலத்திற்காக பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தார்கள்

என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை என்னுடைய புகாரிலும் போலீசார் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன், அந்த நேரத்தில் எந்த வேலையும் நடக்கவில்லை. முதல் விசாரணையில் மேற்கண்டவாறு வேலை நடந்துக் கொண்டிருந்ததாக சொல்லவிட்டு தற்போது இந்த வழக்கிற்காக வேலை நடக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வேலை நடக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

அந்த இடத்தை நான் லீசுக்கு விட்டு சம்பாதிப்பதால் நீங்கள் சம்பாதிப்பதற்கு என் நிலம் தான் கிடைத்ததா என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். வேலை செய்பவர்கள் சிறுநீர் கழிப்பதில் தான் பிரச்சனை என்று நான் சொல்லியுள்ளேன், அதனால் நான் நியாயம் கேட்க போன போது, சிறுநீர் கழித்தவர்களை உடன் அழைத்துச் சென்றேனா என்றால் அழைத்துச் செல்லவில்லை.

என் வீட்டிலிருந்து வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதர நிலையம் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. என் வீட்டிலிருந்து களம்பூர் காவல் நிலையம் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. என் வீட்டிலிருந்து போளூர் அரசு மருத்துவமனை 10, 12 கி.மீ. தொலைவில் உள்ளது. பவானி கொடுத்த புகாரின் அடிப்படையில், களம்பூர் காவல் நிலைய குற்ற எண்.321/2019, U/s. 294, 323, 324, 506(ii) என் மீதும் என் தகப்பனார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.